<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 12.08.2025, அ.வ.எண்.137/2019, வா.சா.1. நீலவேணி, க/பெ.சின்னசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வருவாய் துறை அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா பி அட்டவணை சொத்தில் 30 வருடமாக தென்னை மரங்களை நட்டு தேங்காய் போட்டு வருகிறேன் அதில் அடையாளம் தெரியாத நபர்கள் பிரச்சனை செய்துவருகிறார்கள். அரசாங்க அதிகாரிகள் மட்டும் பிரச்சனை செய்கிறார்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் பக்கத்து நிலத்துக்காரர்களும் பிரச்சனை செய்கிறார்கள். தாவா ஏ அட்டவணை சொத்தில் எத்தனை ஏக்கர் பூமி உள்ளது என்றால் 9 ஏக்கர் 60 செண்ட் ஆகும். எனக்கு தனிப்பட்ட முறையில் எவ்வளவு ஏக்கர் பாத்தியப்பட்டது என்றால் 2 1/2 ஏக்கர் ஆகும்.

2) 2 ம் வாதி எனது அம்மாவிற்கு எவ்வளவு ஏக்கர் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு கொடுத்த 2 1/2 ஏக்கர் நிலம் தான் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது ஆகும். தாவா ஏ அட்டவணை சொத்தாக எனக்கு பாத்தியப்பட்டதாக சொத்து விவரத்தில் 9 ஏக்கர் 60 செண்ட் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 2 ம் வாதி இந்த வழக்கில் ஏன் தரப்பினராக உள்ளார் என்றால் எனக்கு 30 தென்னை மரங்கள் அந்த இடத்தில் உள்ளதால் அவரும் தரப்பினராக உள்ளார்.3 முதல் 7 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் சொல்ல கேட்டேன். எனது சொத்து விவரத்தில் 30 தென்னை மரங்கள் உள்ள இடம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில் அதற்கான காலை எண்ணோ எல்லை விவரங்கள் நான் குறிப்பிடவில்லை என்றால் பொள்ளாச்சி தார் ரோடு அதனை

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

ஒட்டி வாய்க்கால் அதனை ஒட்டி எங்களது தோட்டம் உள்ளது. நான் தோட்டம் என்று சொல்வது 30 தென்னை மரங்கள் உள்ள இடமா என்றால் ஆமாம்.

3) எனக்கு பாத்தியப்பட்ட காலை எண்.916 க்கு வடபுறம் நெடுஞ்சாலைக்கு சொந்தமான கிழமேல் தார் ரோடு அதற்கு வடபுறம் பொதுபணித்துறைக்கு சொந்தமான பி ஏ பி வாய்க்காலும் அதனை ஒட்டி வடபுறம் பொதுபணித்துறைக்கு சொந்தமான மேற்படி பி ஏ பி வாய்க்காலை பராமரிக்க விடப்பட்ட இடம் மட்டுமே உள்ளது என்றால் நாங்கள் இடத்தை ஆக்கரமிக்கவில்லை தென்னை மரத்தில் உள்ள தேங்காய்களை மட்டும் எடுத்து வருகிறோம். தென்னை மரங்கள் உள்ள மேற்படி இடம் பி ஏ பி க்கு சொந்தமானது என்றால் சரிதான். பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிக்கவோ அதன் சுவாதீனத்தில் இருக்க எனக்கு உரிமையில்லை என்றால் நான் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை மேலே உள்ள தேங்காய்களை மட்டும் எடுத்து வருகிறோம்.

4) தாவா பி அட்டவணை சொத்து எதிர் சுவாதீனப்படி எங்களுக்கு பாத்தியப்பட்டதாக கருதி நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 ,2 பிரதிவாதிகளும் நாங்களும் வஞ்சகக் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என்றும் அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் எனது முன்னோர்கள் அனுபவித்து வந்த நிலையில் அவர்களுக்கு பின்னர் நாங்கள் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்து குறித்து நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R.சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.